## ஆனமடுவ பிரதேச சபை
## புத்தளம் மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 ஆகஸ்ட் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 07 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, ஆனமடுவ பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆனமடுவ பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 55,322,023 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 4,818,402 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,104,806 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 07 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,601,057 ஆக இருந்ததுடன், அவ் விடயங்களுக்கு உரித்தாக பேணப்பட்ட ஆவணங்களின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,968,061 ஆக இருந்தமையால் ரூபா 11,632,996 தொகையான வேறுபாடு கணக்குகளில் காணக்கூடியதாக இருந்தது.

(ஆ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையால் செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 7,818,245 ஆக இருந்ததுடன் அதில் ஒரு வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,956,016 ஆக இருந்தது.

(இ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ஊழியர் கடன் முற்பண மீதியின் கூட்டுத்தொகை ரூபா 4,675,877 ஆகக் காணப்பட்டது.

(ஈ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருட காலத்திற்கு மேலான காலமாக அசைவற்றுக் காணப்படும் சொத்துக்களின் பெறுமதி ரூபா 78,597 ஆகக் காணப்பட்டது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | வீதவரியும் வரியும் | 1,797 | 861 | 936 |
| (ii) | வாடகை | 7,690 | 5,088 | 2,602 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 950 | 747 | 203 |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பிரதேச சபைக்குப் பெறவேண்டிய சகல நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையாகப் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்

பெறுமதி மதிப்பிடப்படாத 49 – 1965 ஆம் இலக்க மின் குபோட்டா நான்கு சக்கர உழவு இயந்திரம் 04 ஆண்டுகளுக்கும், சீமேந்துக் கல் இயந்திரம் ஒரு வருட காலத்திற்கும், ரூபா 597,668 பெறுமதியான 49 – 0994 ஆம் இலக்க உழவு இயந்திரம் 02 ஆண்டு காலத்திற்கு விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்பட்டன.

## 2.5 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) வாகனக் கட்டுப்பாடு
(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு